
# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:8 Issue :29 January 2026*

கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**
Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**
Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**
Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# தமிழ்

# திருக்கருகாவூர் கல்வெட்டுகள் உணர்த்தும் வாழ்வியல் அறம்

# *The moral values conveyed by the Thirukarukavur inscriptions*

**கட்டுரையாளர் :** வ.அஸ்வதி (*Reg. No: BDU2510632781303*), முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), அரசினர் மகளிர் கல்லூரி (தன்), கும்பகோணம் - 612 001,.

**நெறியாளர் :** முனைவர் கோ.ஜெயஸ்ரீ, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்) கும்பகோணம் - 612 001, பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுபெற்றது. திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.*Author : V.Aswathi, Ref No : BDU2510632781303, Ph.D., Research Scholar of Tamil,*

*ORCID, https://orchid.org/0009-0008-1172-4430 Research Guide : Dr.JAYASHREE G, ASSOCIATE PROFESSOR, Government College for Womens (Autonomous) Affiliated to Bharathidasan University, Thiruchirapalli, Tamilnadu, India,*

*ORCiD : https://orchid.org/0009-0002-5383-9187.*

***Abstract :***

*Inscriptions are among the most important sources that reveal ancient history and culture, and the Thirukkarukavur inscriptions, in particular, illustrate the virtuous lives and social responsibility of our ancestors. The Thirukkarukavur inscriptions provide information about the donations of land, goods, and contributions made to temples, charitable institutions, and for religious worship. They also reveal the beliefs, religious devotion, unity, and compassion of the society of that time. The inscriptions found in Thirukkarukavur are not merely writings on stone; they serve as silent witnesses that narrate the life history of our people. These donation inscriptions are considered pillars that not only record acts of charity but also embody the lifestyle, devotion, economic conditions, and historical memories of the ancient Tamils.*

***Key words :*** *Donation, Moral values, Temple inscriptions*

**ஆய்வுச்சுருக்கம் :**

தொன்மையான வரலாற்றையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தும் முக்கிய ஆதாரங்களில் கல்வெட்டுகள் முதன்மையானவை அவற்றில் குறிப்பாக திருக்கருக்காவூர் கல்வெட்டுக்கள் நம் முன்னோர்களின் அற வாழ்வையும் சமூக பொறுப்புணர்வையும் விளக்குகின்றது. திருக்கருக்காவூர் கல்வெட்டுக்கள் ஆலயங்கள், தானசாலைகள் போன்றவற்றிற்கு வழங்கப்பட்ட நன்கொடை, நிலங்கள், பொருட்கள் மற்றும் வழிபாடுகளுக்கு வழங்கிய கொடை பற்றிய தகவல்களையும், அந்த கால சமுதாயத்தின் நம்பிக்கை, மதப்பற்று, ஒற்றுமை மற்றும்

கருணை உணர்வை வெளிப்படுத்ததுகிறது. திருக்கருக்காவூரில் காணப்படும் கல்வெட்டுக்கள் என்பது வெறும் கல் எழுத்துக்கள் அல்ல அவை நம் மக்களின் வாழ்க்கை வரலாற்றினை சொல்லும் மௌன சாட்சிகளாகவும் அமைகின்றன. கொடை கல்வெட்டுகள் என்பது தானச் செய்திகளை மட்டும் பதிவு செய்யாமல் பண்டைய தமிழரின் வாழ்வியல் பக்தி, பொருளாதார மற்றும் வரலாற்று நினைவுகளையும் தாங்குகின்ற தூணாகவும் கருதப்படுகிறது.

**திறவுச்சொற்கள் :** கொடை, வாழ்வியல் அறம், திருக்கோயில் கல்வெட்டு

**முன்னுரை :**

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், திருக்கருகாவூரில் அமைந்துள்ள அருள்மிகு முல்லைவனநாதசுவாமி திருக்கோயிலில் உள்ள *31* கல்வெட்டுகளின் மூலமாக பண்டைய தமிழரின் வாழ்வியல் அறம், கொடை (நிலம், பொன், நந்தாவிளக்கு, ஈழக்காசு, நெய், நைவேத்தியம் செய்வதற்கான பொருட்கள் போன்றவை) போன்றவைகளை மையமாகக் கொண்ட செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

மனித சமுதாயத்தின் வரலாற்றை அறிய மிக முக்கியமான ஆதாரங்களில் ஒன்றாக இவ்வூர் கல்வெட்டுகள் குறிப்பிடப்படுகின்றது. கல்வெட்டுகள் என்பது கல், கல்தூண், கோவில் சுவர், குகைசுவர் போன்றவையில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் ஆகும். இவை அரசர்களின் ஆட்சி காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளையும் அரசாணை குறியீட்டு நிலங்கள், கோவிலின் சேவைகள் வரி விடுதல் போன்றவை பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோவில்களுக்கு நிலம், விளக்கு, நெய், நீர், உணவு, பணம், நகை, மாடு போன்றவற்றை தானமாக அளிப்பதை குறிப்பிடுகிறது. கொடை கல்வெட்டுக்கள் நமக்கு பல வாழ்வியல் மதிப்புகளையும் உணர்த்துகிறது. அவை தானம், பக்தி, கருணை, ஒற்றுமை, அன்பு,கடமை, நன்றி போன்ற அறங்களை வளர்க்கிறது. மனிதன் தனது செல்வத்தை பிறருக்கு பகிர்ந்து கொள்ளும் பண்பை உண்மையான வாழ்வின் நோக்கம் என்பதை அவை எடுத்துக்காட்டுகிறது. பிறருக்காக வாழ்வதே அறம் என்ற கருத்தை கல்வெட்டுகளின் வாயிலாக தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

**திருக்கருக்காவூர் கல்வெட்டுகளில் காணப்படும் அறம்:**

திருக்கருக்காவூர் கல்வெட்டுகள் பண்டைய தமிழர் வாழ்ந்த வாழ்வியல் அறத்தை வெளிப்படுத்துகிறது. அக்கால மக்கள் தங்களுடைய வாழ்க்கையை அறம், பக்தி, கடமை ஆகியவற்றின் அடிப்படையில் அமைத்திருந்தனர். பல கல்வெட்டுக்கள் மக்கள் கோவில்களுக்கு நிலம், அணிகலன்கள், விளக்குகள் போன்றவற்றை வழங்கி இருப்பதை வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் அவர்கள் இரக்கம் உள்ள மனிதர்களாகவும் தான தர்மம் மற்றும் பக்தி உணர்வு கொண்டவர்களாகவும் இருந்தனர் என்பதையும் உணர்த்துகிறது.

*"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*சொல்லுமவாய் எல்லாம் செயல்"*

*(குறள் -33)*

*நம்மாலே முடிந்த வகையில் எல்லாம் முடியக்கூடிய வழிகளிலும் அறச்செயல்களை இடைவிடாமல் தொடர்ந்து செய்து வருதல் வேண்டும்.*

*இக்குறலின் மூலம் கல்வெட்டுக்கள் நமக்கு பழைய தமிழர்களின் அறம் சார்ந்த வாழ்வியலையும், உயர்ந்த மனித மதிப்புகளையும் உணர்த்தும் விலை மதிப்பற்ற ஒன்றாக கருதப்படுகிறது.*

**கொடையின் நோக்கம்:**

*கொடை என்பது ஒருவரின் சொத்தில் இருந்து அல்லது ஆட்சியில் இருந்து மற்றவர்களுக்கு வழங்கும் தானமாகும் இது பெரும்பாலும் சமூக நலனுக்காகவும் பொது நலனுக்காகவும் கொடையாக வழங்கப்பட்டுள்ளது.*

**"சிறந்த நுகர்ந்தொழுகும் செல்வ முடையார்**
**அறஞ்செய் தருளுடைய ராதல் — பிறங்கல்**
**அமையோடு வேய்கலாம் வெற்ப!**
**அதுவே சுமையோடு மேல்வைப்பா மாறு"**

*(பழமொழி -357)*

*செல்வம் அதிகமாக இருந்தாலும் கொடை பண்பு இல்லாதவன் ஏழை போன்றவன். ஆனால் கொடையுள்ளம் கொண்டவன்தான் உண்மையான செல்வந்தன் என குறிப்பிடப்படுகிறது.*

**திருக்கருக்காவூர் அறிமுகம்:**

*வற்றாத நீரும், வளம் செழிக்கும் காவிரியின் முற்றாத வாழை முகம் பார்க்கும் கொள்ளிடமும் வெண்ணாற்றிடை உயர்ந்த வீரத்தமிழ் சுவையும் கண்ணார காண்கின்ற கன்னித்தமிழகமாய் சோழ பெருநாட்டின் காவிரியின் தென்கரை தளங்களில் மிக சிறப்பு வாய்ந்த*

பிரார்த்தனை தளமாக விளங்கி வருவது கருக்காத்த நாயகி உடனுறை முல்லைவனநாதர் சுவாமி திருக்கோவில் ஆகும். இத்திருக்கோயில் பாபநாசத்திற்கு தெற்கே 6 கிலோமீட்டர் தூரத்திலும் கும்பகோணத்தின் தென்மேற்கில் 20 கிலோ மீட்டர் தூரத்திலும் சாலியமங்கலத்தின் வடக்கே 10 கிலோமீட்டர் தூரத்திலும் தஞ்சாவூரின் வடக்கே 20 கிலோமீட்டர் தூரத்திலும் இத்திருக்கோவில் அமைந்துள்ளது.

**திருக்கோவிலின் சிறப்பு:**

திருக்கருக்காவூர் முல்லைவனநாதர் சுவாமி திருக்கோவிலில் உள்ள கல்வெட்டுகளில் இதுவரை 31 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டுள்ளன. அவை முதல் பராந்தக சோழனின் காலத்திலிருந்து பிற்கால சோழனின் ஆட்சிக்காலம் முடியும் வரை உள்ள கால வரிசையில் உள்ளது ஆகும். இத்திருகோயிலில் முதல் பாராந்தக சோழனின் காலத்தில் கிபி 907 முதல் 953 வரை கற்றளியாக புதுப்பிக்கப்பட்டது. கல்வெட்டுக்கள் அங்கு சாசனமாக இடம் பெற்றுள்ளன.

**திருக்கோவில் வரலாறு:**

வித்துருவர், அவர் மனைவி வேதிகை இத்தளத்தில் வசித்து வந்தனர். அச்சமயம் முனிவர் ஊர்த்துவபாதர் தம் பசிக்கு உணவு கேட்டார். கருவுற்றிருந்த வேதிக்கை தளர்ச்சி மிகுதியால் எழுந்து அண்ணமிட முடியவில்லை. இதனை அறியாத முனிவர் கோபமுற்று “இராசய்சு“ என்னும் நோயால் வருந்துமாறு சாபமிட்டார். முனிவர் ஊர்துவபாதர் சாபத்தால் நித்திருவரின் மனைவி வேதிகைக்கு ஏற்பட்ட கருச்சிதைவை இறைவன் மருத்துவம் பார்த்து அவள் கருவை காத்ததால் கருக்கருக்காவூர் என்னும் பெயர் பெற்றது.

**கமுத முல்லை கமழ்கின்ற கருகாவூர்**
**அமுதர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே**
**-திருஞானசம்பந்தர்**

**கருவாய் உலகுக்கு முன்னே தோன்றுங்**
**கண்ணாம் கருகாவூர் எந்தை தானே**
**-திருநாவுக்கரசர்**

**இக்கோவிலில் சுவாமி சன்னதி பிரகாரத்தில் கீழ்காணும் விவரப்படியான கல்வெட்டுகள் உள்ளன.**

**கல்வெட்டு எண் 1**

திருக்கருகாவூர் கோவில் உடையார்களான கவுசிகன் மீசுனி, ஆயிரவன்மாறன் இவன் மக்கள் மாறன் சிங்கன், மாறன்குலதீபன், மாறன்கொற்றன் ஆகியோருக்கு முன்னர் பூஜைக்குரிய காணியுரிமம் பெற்றிருந்த பரமயோகி மாரன், வடுகன்பிசங்கன், பிச்சமாதேவன் ஆகியோரிடம் விலைக்கு வாங்கியதன் மூலம் தாங்கள் பெற்ற நிலத்தினை இத்திருக்கோவிலுக்கு 20 ஈழக்காசுகளுக்கு கொடுத்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது.

மேற்காணும் கல்வெட்டில் இத்திருக்கோவிலுக்கு நிலத்தை தானமாக வழங்கியதன் மூலம் தமிழர் அறம் பற்றி அறிய முடிகிறது. மேலும் தமிழக நாணயங்கள் மட்டும் அல்லாமல் வெளிநாட்டு நாணயங்களும் இவ் ஊரில் புழக்கத்தில் இருந்ததை இதன் மூலம் அறிய முடிகிறது.

*"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்*
*உடையானாம் வேந்தர்க்கு ஒளி"*

(குறள்-390)

கொடைப்பண்பும், கருணையும், நீதி மறையும், தளர்ந்த குடிகளை காத்தலும் ஆகிய நான்கு செயல்களையும் உடையவன் ஏனைய அரசர்க்கெல்லாம் விளக்காவான்.

**கல்வெட்டு எண் 2**

கொம்மைபாக்கமுடையான் சிங்கன் கலியனான உத்தமசோழ மூவேந்த வேளாண் கேட்டுக் கொண்டதன் பேரில் திருவலஞ்சுழி கோயிலில் ஐப்பசி மாதம் அதிகாலையில் வந்த அரசன் கொடுத்த மூன்று வேலி நிலக் கொடையை குறிக்கிறது. 3 வேலியில் இருந்து பெறப்படும் 710 களநெல்லினைக் கொண்டு நெய்வேதியம், நெய்விளக்கு, ஊழியர்கள் ஊதியம், ஆடை, சந்தனம் குங்கிலியம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

3 வேலி நிலத்திலிருந்து சுமார் 8,520 படி (1 படி = 1.5 கிலோ) கிடைக்கும் நெல்லின் மூலமே ஊழியர் ஊதியம் ஆடை அணிகலன்கள் திருக்கோயிலுக்கான நெய்வேதியம் போன்றவை நடைபெற்றுள்ளன என்று அறிய முடிகிறது. மேலும் நஞ்சை விவசாயம் அக்காலத்தில் செழிப்புடன் இருந்தது என்பதையும் இக்கல்வெட்டு உணர்த்துகிறது.

**கல்வெட்டு எண் 3**

கொற்றங்கொடையான் அரங்கன் குஞ்சிக மல்லன், பாரதாயன் சுவரன், திருமால் பாரதாயன், தாமோதரன் நாராயணன், காவிரி நாராயணன் ஆயிரவன், பாரதாயன், நக்கன், சேந்தன் ஆகியோர் கொடுத்த மொத்த நிலம் மூன்று வேலிக்கு இறைநீக்கம் செய்யப்பட்டது.

அந்நிலத்தில் இருந்து இண்டை மாலை இரண்டும், திருமாலை ஒன்றும், கை மணி ஒன்றும் செய்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

- ❖ இண்டை மாலை என்பது இண்டை என்ற தாவரத்தின் பூக்களை கொண்டு கட்டப்படும் ஒருவகை மாலை ஆகும். இண்டை என்பது பல தாவரங்களை குறிக்கும். இன்டம்போ, இண்டு கொடி, முல்லை, தொட்டா சுருங்கி போன்றவை இண்டையின் பல்வேறு வடிவமாகும். அழகுக்காகவும் கடவுளுக்கு அணிவிப்பதற்காகவும் இந்த மாலை பயன்படுத்தப்படுகிறது.
- ❖ திருமாலை என்றால் புனிதமான மாலை அல்லது இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும் மலர் மாலையை குறிக்கிறது. கோவிலில் இறைவனுக்கு தினமும் அல்லது விழாக்களில் திருமாலை அணிவிக்கும் சடங்கு நடைபெறுகிறது.
- ❖ கைமணி என்பது இறைவனுக்கு பூஜை செய்யும் பூஜை செய்யப்படும் பொழுது இசைக்கப்படும் ஒருவகை மணி ஆகும்

***“அறத்தான் வருவதே இன்பம் மற் றெல்லாம்***
***புறத்த புகழும் இல“***

*(குறள்-.39)*

அறவழியால் வரும் இன்பமே சிறந்த இன்பமாகும் பிறவழியால் வருவன துன்பமே தரும் அத்துடன் புகழும் இல்லை

**கல்வெட்டு எண் 4**

திருக்கருக்காவூர் மாதேவர் நிலம், கலா பிடாரி நிலம், மகாவிஷ்ணு நிலம் (புராண சங்கரர்) கீழூர் கணபதியார் அவல் துடவை நிலம், குசக்குடி நங்கை, திருவிளக்கிற்கு விடப்பட்ட நிலம், கடிகை புறம் ஆகியற்றுக்கு கொடுக்கப்பட்ட நிலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசர்களில் தொடங்கி சாதாரண மனிதனும் தம்மால் முடிந்த வரையில் நிலங்களை கொடையாக கொடுத்துள்ளனர் என அறிய முடிகிறது.

***தானம் கொடுக்கும் தகைமையும் மானத்தால்***
***குற்றம் கடிந்த ஒழுக்கமும் தெற்றன***
***பல்பொருள் நீங்கிய சிந்தையும் -இம்***
***மூன்றும் நல்வினை ஆர்க்கும் கயிறு***

*(திரி -23)*

1.தானம் கொடுக்கும் தகையுடைமை

2.குற்றம் நீக்கி மானத்தோடு வாழும் ஒழுக்க நெறி

*3.மேலும் மேலும் பல பொருள்களுக்கு ஆசைப்படாமல் இருக்கும் எண்ணம் இவை மூன்றும் நல்வினையை யாராயிருந்தாலும் கட்டித் தரும் கயிறு.*

**கல்வெட்டு எண் 5**

*திருக்கருகாவூர் மூபாடுடை பெருமக்கள் திருக்கருகாவூர் மகாதேவர் கோயிலுக்காக 31 காசுகள் பெற்றுக் கொண்டு நிலம் விற்பனை செய்த சாசனமாக இக்கல்வெட்டு அமைகிறது.*

*கோவிலின் நித்தம் பூஜைகள் நடைபெறவும், நிதி லாபத்திற்கு அல்லாமல், 31 காசுகள் பெற்றுக் கொண்டு, கோவிலின் தேவைகளுக்காக அந்த நிலம் விற்பனை செய்யப்பட்டு கோவிலின் சொத்தாக மாறியதால் வந்த வருமானத்தால் தீபாராதனை நெய்வேதியம் திருவிழாக்கள் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்பட்டது.*

**கல்வெட்டு எண் 6**

*சாத்தன் என்பவன் அளித்த கொடை பற்றி குறிப்பிடுகிறது.*

*கோவிலுக்கோ அல்லது தெய்வத்திற்கோ தன்னுடைய சொத்து, நிலம், தங்கம், மாடு போன்றவற்றை தானமாக அளித்ததன் மூலம் சாத்தன் கோவிலின் சேவை பணிக்கு துணை செய்தார் என்பதை உணர்த்துகிறது.*

**கல்வெட்டு எண் 7**

*திருக்கோவிலில் விழாவுக்கு என அளிக்கப்பட்ட 13 வேலி நிலங்கள் பற்றி விளக்குகிறது.*

*நம்மிடம் உள்ள விலை நிலங்களை கோவிலுக்காக தானமாக அளித்து அதன் விளைச்சலை திருவிழாக்களுக்கு செலவு செய்தனர். தானமாக அல்லாமல் அதிபக்தி உணர்வையும், அற ஒற்றுமையையும் வெளிப்படுத்துகிறது.*

**கல்வெட்டு எண் 8**

*திருக்கருக்காவூர் தில்லைநாயக்கருக்கு நடராஜர் 2 1/2 வேலி நிலம் அளித்ததை குறிப்பிடுகிறது. இறைவனின் மீது மிகுந்த பக்தி வெளிப்பாட்டால் நடராஜருக்கு மஞ்சள் கலந்த திருமஞ்சனம் செய்வதற்காக நிலங்கள் தானமாக கொடுக்கப்பட்டுள்ளன.*

**கல்வெட்டு எண் 9**

திருவிளக்கு நெய்வேத்தியத்துக்கு அளிக்கப்பட்ட நிலக் கொடைகள் பற்றி விவரிக்கின்றன.

தினசரி அல்லது விழாக்களுக்கு எரியும் விளக்குகளாக எண்ணெய் விளக்குகள், விளக்கு நிதி ஆகிவற்றை கொடையாக அளித்தனர். தினசரி நெய்வேத்தியத்துக்கு நிலக்கொடைகள் கொடுத்துள்ளனர். இதன் மூலம் கோவில் பூஜை முறைகளில் எவ்வளவு ஆழ்ந்த பங்கேற்பு கொண்டு இருந்தனர் என அறிய முடிகிறது.

**கல்வெட்டு எண் 10**

நந்தா விளக்கு எரிக்க அளிக்கப்பட்ட கொடை பற்றி கூறுகிறது.

இரவும் பகலும் அணையாமல் தொடர்ந்து எரிவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. தூண்டா விளக்கு எனவும் குறிப்பிடப்படுகிறது. திரிக்கு எண்ணெய் ஊற்ற வேண்டிய அவசியம் இல்லை. மேலும் இந்த விளக்கு சங்க இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவிளக்கு கொடை மூலம் அந்த தலத்தின் சன்னதி எப்பொழுதும் ஒலியுடன் பிரகாசிக்கும் என்ற நோக்கம் கொண்டு ஒளியின் மூலம் இறைவனிடம் இணைய முடிகிறது என கருதப்படுகிறது.

**"அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை"**

(குறள்-36)

முதுமை காலத்து அறம் செய்வோம் என எண்ணாமல், இப்பொழுதே செய்க. அவ்வாறு செய்தால் ஒருவன் இறக்கும் காலத்தில் அவன் உயிரோடு செல்லும் துணையாகும்.

**கல்வெட்டு எண் 11**

திருக்கோயில் பூஜைகளுக்காக திருச்சிற்றம்பல உடையார் 13 வேலி நிலம் அளித்ததை விவரிக்கிறது.

தன்னிடம் உள்ள சொத்துக்களை தான் மட்டுமே அனுபவிக்காமல், தன்னிடம் உள்ள சொத்தில் இருந்து பாதி அளவை கோவிலுக்கு கொடை அளிப்பதன் மூலம் அது கோவிலின் சொத்தாக மாறி தின பூஜைகளுக்காக அந்த நிலத்திலிருந்து வரும் வருவாயை இறைவனுக்காகவும் செலவு செய்வதை குறிப்பிடுகிறது. நம்மிடம் உள்ளதை பிறருக்கு கொடுத்து மகிழ்பவரும் பரந்த மனப்பான்மை குணம் கொண்டு இருக்கிறார் எனவும் அறிய முடிகிறது.

**கல்வெட்டு எண் 12**

திருகருக்காவூர் மகாதேவர் முன்னும், நாச்சியார் முன்னும் நெய்விளக்கு ஏற்றுவதற்காக விழிய நாட்டவன் ஒன்றரை வேலி நிலம் அளித்ததை குறிக்கிறது. நெய் விளக்கிற்காக கொடை கொடுத்தது பொருளாதார உதவி அல்ல.அது அறம், பக்தி ஞானத்தின் வெளிப்பாடாக கருதப்படுகிறது. நம்பிக்கை என்பதை பரப்பவும், மனம் எப்பொழுதும் ஒளிரட்டும் என்ற நோக்கத்தையும் கொண்டுள்ளது.

**கல்வெட்டு எண் 13**

உளுத்தங்குடி என்னும் ஊரினன் ஒருவன் கோவிலுக்கு நெய் கொடையாக கொடுத்துள்ளான்.

நெய் கொடையாக கொடுப்பதன் மூலம் அது உடனடியாக கோவிலில் விளக்கு எரிய பயன்படும். அதனால் நெய் சிறந்த தானமாக கருதப்படுகிறது.

**கல்வெட்டு எண்14**

திருக்கருக்காவூர் தில்லை நாயனார் நடராஜர் மகாதேவர் மூலவர் ஆகிய தெய்வங்களுக்கு நெய்வேதியம் விளக்குகள் எரிக்கவும் அளிக்கப்பட்ட நிலக் கொடை பற்றி குறிப்பிடுகிறது.

தன்னிடம் உள்ள சொத்துக்களில் இருந்து கோவிலுக்கு ஒரு பங்கு தானம் கொடுப்பதன் மூலம் அது கோவிலின் சொத்தாக மாறுகிறது. அந்த நிலத்தில் விளையும் நெல்லை விற்று கோவிலுக்கு தேவையான விளக்கு, நெய்வேதியம் போன்ற தேவைகளுக்காகவும் நிலங்கள் கொடையாக கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் சமூக மனப்பான்மை கொண்டவர்களும் இருந்தனர் என அறியமுடிகிறது.

**கல்வெட்டு எண் 15**

தஞ்சாவூர் ஜெய பீமதளி என்னும் கோவிலை சேர்ந்த நக்கல் தேவரடியார் திருக்கருக்காவூர் மகாதேவன் கோயிலில் விளக்கு எரிப்பதற்காக அளித்த கொடை பற்றி விவரிக்கிறது.

இந்த நிலம் வடவூர் வெண்காடு என்னும் ஊரில் இருந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. விளக்கு எரிவதற்காக நக்கன் தேவர் அடியார் திருக்கருக்காவூர் மகாதேவனுக்காக தன் சொத்தில் இருந்து வடவூர் (இன்றைய காலகட்டத்தில் வடுவூர்) என்ற ஊரில் நிலம் கொடையாக கொடுத்தார் எனவும் அதன் மூலம் வரும் வருமானங்கள் திருக்கோயிலில் விளக்கு எரிப்பதற்காக

பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் உதவும் மனப்பான்மை கொண்டவர்களும் வாழ்ந்தனர் என அறிய முடிகிறது.

*"அறஞ்செய் பவர்க்கும் அறவழி நோக்கித்*
*திறந்தெரிந்து செய்தக்கால் செல்வழி நன்றாம்*
*புறஞ்செய்யக் செல்வம் பெருகும் அறஞ்செய்ய*
*அல்லவை நீங்கி விடும்"*

(பழமொழி 364)

அறவழி நோக்கி திறந்தெரிந்து, அவர்க்கு வேண்டுவன அளித்தல் நன்று. எனவே இடனும் திறனும் அறிந்து அறம் செய்ய வேண்டும்.

**கல்வெட்டு எண் 16**

திருக்கருகாவூரில் உள்ள களாபிடாரி மகாவிஷ்ணு கோவில்களுக்கு உரிய நிலங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

திருக்கருக்காவூர் கோவிலில் உள்ள நிலங்கள் கொடையாக கொடுக்கப்பட்டவை ஆக இருக்கக்கூடும் என அறியப்படுகிறது.

திருக்கோவிலுக்கு கொடையாக ஒன்பதரை வேலி நிலம் கொடுக்கப்பட்டதால் அந்த ஊர் ஒன்பதரை வேலி என அழைக்கப்படுகிறது. இந்த நிலம் தற்பொழுது திருக்கோவிலிலிருந்து 200 மீட்டர் தொலைவில் உள்ளது.

**கல்வெட்டு எண் 17**

வில்லவன் மகாதேவியார் எனும் அரசரின் பணி மகளான விக்கிரமபரணி என்பவள் திருக்கருக்காவூர் கோவிலுக்கு நிலக்கொடை அளித்ததை பற்றி குறிக்கிறது.

சாதாரண ஊழியர்கள் கூட கோயிலுக்கு தம்மால் இயன்றதை கொடுக்கக்கூடிய கொடை மனப்பான்மை கொண்டவராக இருந்துள்ளனர் என்று இதன் மூலம் அறிய முடிகிறது.

**கல்வெட்டு எண் 18**

உத்தம சோழன் 3 வேலி நிலம் அளித்ததை பற்றி விவரிக்கின்றது.

உத்தம சோழன் திருக்கருக்காவூர் கோவிலுக்கு 3 வேலி நிலத்தை கொடையாக கொடுத்துள்ளார் இதன் மூலம் அரசர்களிடமும் தம்மிடம் உள்ளதை பிறருக்கு கொடுக்கக்கூடிய கொடை மனப்பான்மையுடன் வாழ்ந்தனர் என அறிய முடிகிறது.

**கல்வெட்டு எண் 19**

சதுர்வேதி மங்களங்களை சார்ந்த மகாசபையினர் நில கொடைகள் அளித்ததையும், நன்கொடை அளித்ததையும் பற்றி கூறுகிறது.

நன்கொடை அளிப்பது தன்னலமற்ற செயல். அதாவது எதையும் எதிர்பார்க்காமல் செய்யும் நல்ல எண்ணத்தை குறிக்கிறது.

***"தக்கமில் செய்கை பொருள் பெற்றால்***
***அப்பொருள் தொக்க வகையும் முதலும்***
***அதுவானால் மிக்க வகையால் அறஞ்செய்***
***கெனவெகுடல அக்காரம் பால்செருக்கு மாறு"***

(பழமொழி -362)

அறத்தால் பொருள் பெறுபவன் அறத்தாலையே புகழ் பெறுவான்.

**கல்வெட்டு எண் 20**

திருக்கருக்காவூர் மகாதேவருக்கு விளக்கு இடுவதற்காக அளித்த நிலக்கொடை பற்றி கூறுகிறது.

இது சமுதாயத்தின் நல்லொழுக்கத்தை நிலை நிறுத்தவும், இதன் மூலம் இறையருள் கிடைக்கவும் மன அமைதி கிடைக்கவும் நிலக்கொடை கொடுக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டு எண் 21**

கோவிலுக்கு நன்கொடை அளிக்கப்பட்டவர்களில் பெயர் பட்டியல் காணப்படுகிறது. இக்கல்வெட்டில் கொற்றங்குடி என்னும் ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்பொழுது அந்த ஊர் கொத்தங்குடி ஆக இருக்கலாம் என கருதப்படுகிறது. அந்த ஊரை சார்ந்த குஞ்சரமல்லன் என்பவன் பெயர் காணப்படுகிறது.

சமூக நன்மைக்காக நன்கொடை அளிக்கப்பட்ட செய்தியை குறிப்பிடப்படப்பட்டுள்ளது.

**கல்வெட்டு எண் 22**

திருக்கருக்காவூர் கோயிலை சேர்ந்த பாசுபத மூர்த்திக்கு பிரம்பையும் பீடத்தையும் அளித்தது பற்றி கூறுகிறது.

ஒரு பக்தர் தெய்வ நம்பிக்கையாலும் சுயவிருப்பத்தாலும் ஒரு கோவிலுக்கு பிரம்பையும் (பிரம்பு = ஒளி, பிரகாசம், ஜோதி) (பீடம் = தெய்வம் அமரும் மேடை அல்லது ஆசனம் தெய்வம் அமரும் இடம்) ஒளி மற்றும் பிரகாசத்துடன் அலங்கரிக்கப்பட்ட பீடத்தையும்

குறிக்கிறது. நன்கொடையாளர்கள் கோவிலின் வளர்ச்சிக்காகவும் ஆன்மீக எண்ணத்தை மையமாகக் கொண்டும் கோவிலுக்கு கொடை அளித்துள்ளனர்.

**கல்வெட்டு எண் 23**

மகாசபை கோவிலுக்கு நிலம் விற்றது பற்றியும் தத்தன் விடங்கள் தேவன் 17 களஞ்சி 11 மஞ்சாடி பொன் அளித்தது பற்றி கூறுகிறது.

இத்திருக்கோவில்களுக்காக நிலங்கள் விற்றதாகவும், ( 17 களஞ்சி எட்டு லிட்டர் வரையும்) (11 மஞ்சாடி பொன் 11x0.13 சுமார்1.43 1 1/2 கிராம் தங்கம்) நன்கொடை கொடுப்பதன் மூலம் தெய்வத்தின் அருளொளி எல்லோருக்கும் பரவட்டும் என்ற உணர்வை குறிக்கிறது.மக்கள் அனைவரும் தெய்வ வழிபாட்டை நிலை நிறுத்தி சமூக நோக்குடன் செயல்பட்டனர் என்பதை அறிய முடிகிறது.

**கல்வெட்டு எண் 24**

சோறு உடைய சோழன் விழுப்பறையன் என்பான் அளித்த அணிகலன், பூஜை பாத்திரம், இசை கருவிகள் பற்றி விவரிக்கிறது.

இக்கல்வெட்டு திருக்கோவிலில் இறைவன் முல்லைவன உடையார் என்று குறிப்பிடப்படுகிறது.

❖ **அணிகலன்:**

தெய்வத்திற்கு அணிவிக்கும் அழகு பொருட்கள், தங்க கிரீடம், மாலைகள், கை வளைகள், கதிர்கள், காதணிகள், ஆபரணம் சில சமயம் தங்கம் மற்றும் வெள்ளி போன்றவை ஆகும்.

❖ **பூஜைகள்:**

தெய்வத்திற்கும் தீபம் ஏற்ற பயன்படும் நெய் எண்ணெய் திரி விளக்கு நெய்வேத்தியம் போன்றவை உணவுப் பொருட்கள், பூஜைக்கு கொடை செய்வது புனிதமான ஒரு கடமை என்பதை உணர்த்துவதற்கு கொடை வழங்கப்படுகின்றது.

❖ **பாத்திரம்:**

கலசம், பாத்திரம், தட்டு, அரிவாள், தீபஸ்தம்பம், நெய் விளக்கு போன்ற கொடையாக கொடுக்கப்படும் பொருட்கள் வருடம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது.

❖ **இசைக்கருவிகள்:**

- இசை என்பது கடவுளின் மொழி.
- தாளக்கருவி = மிருதங்கம், தவில், மத்தளம், முரசு, உடுக்கை,
- மூச்சுக் கருவி= நாதஸ்வரம் சங்கு புல்லாங்குழல் ,

- தந்திக் கருவி =யாழ் வீணை வில்யாழ்

கடவுளின் சேவைக்கு இசை பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தால் இசைக்கருவிகளை கோவிலுக்கு தானமாக அளித்துள்ளனர் என்று இதன் மூலம் அறிய முடிகிறது.

கல்வெட்டு எண் **25**

திருக்கருக்காவூர் மகா தேவரின் புஷ்ப விழா நடத்த இரண்டு வேலி நிலம் அளித்ததை பற்றி கூறுகிறது.

புஷ்ப விழா என்பது இறைவனுக்கு அர்பணிக்கப்பட்ட மலர்விழா. புஷ்ப விழா நடத்த கொடை என்பது வெறும் பொருளாதார தானம் அல்ல. அது அழகை வழிபாடு ஆக்கிய பக்தியின் வடிவமாகவும் கருதப்படுகிறது. மலரின் நறுமணம் போல அந்த கொடை அளித்த பக்தரின் நினைவாகவும் பக்தியின் வெளிப்பாடாகவும் பரவி நிற்கிறது.

கல்வெட்டு எண் **26**

இறைவனுக்கு அளித்த நிலக்கொடை பற்றி கூறுகிறது. இறைவனுக்கு அளிக்கப்படும் நிலம் பலவித தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டது. நெய் விளக்கிற்காகவும் நெய்வேத்தியத்திற்காகவும் திருவிழாவிற்காகவும் புஷ்பம் வாங்கவும் ஊதியத்திற்காகவும் அந்த நிலங்கள் பயன்படுத்தப்படுகிறது.

கல்வெட்டு எண் **27**

திருக்கருக்காவூர் மகாதேவர் முன்பு நந்தா விளக்கு எரிக்க அளிக்கப்பட்ட நிலக்கொடைகளை குறிக்கிறது.இரவும் பகலும் அணையாமல் தொடர்ந்து எரிவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது இந்த தூண்டா விளக்கு. மேலும் இந்த விளக்குகளை பற்றி சங்க இலக்கியங்களும் கல்வெட்டுகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் பரந்த மனப்பான்மை குணம் கொண்டவரும் இருந்தனர் எனவும் தெரிந்து கொள்ள முடிகிறது

**கல்வெட்டு எண் 28**

திருக்கருக்காவூர் இறைவனுக்கும் இறைவிக்கும் 3 நந்தா விளக்கு எரிப்பதற்காக 3/4 வேலி நிலம் அளித்ததை விவரிக்கிறது.

நம்மிடமுள்ள சொத்தில் இருந்து ஒரு பாதியை இறைவனுக்காக நிலக்கொடை செய்ததன் மூலம் அதிலிருந்து வரும் வருமானத்தில் இருந்து இறைவனுக்கும் இறைவிக்கும் வேண்டிய எல்லா வகையான பொருள்களையும் வாங்கவும் சேவைகளை செய்யவும்

நிலக்கொடையிலிருந்து வரும் வருமானம் பெரிதும் உதவுகிறது. தெய்வீக நம்பிக்கைகளையும் இறை அருளையும் இக்கல்வெட்டு உணர்த்துகிறது.

**கல்வெட்டு எண் 29**

நிலக்கொடைகள் பற்றிய குறிப்பிடுவதோடு ஈழக் காசுகளையும் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டுகள் நிலக் கொடைகள் பற்றிய குறிப்பிடுவதோடு அந்த காலத்தில் தமிழக நாணயங்கள் மட்டுமல்லாமல் அயல் நாட்டு நாணயங்களும் புழக்கத்தில் இருந்ததையும் வணிகர்கள் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு வணிகம் செய்ததையும் அறிய முடிகிறது. நிலக்கொடை அளிப்பதன் மூலம் கொடுக்கும் மனப்பான்மை கொண்டவர்களும் வாழ்ந்தனர் என தெரிந்து கொள்ள முடிகிறது.

**கல்வெட்டு எண் 30**

இத்திருக்கோவிலுக்காக வீரமங்கையூர் என்னும் ஊரில் நிலம் அளிக்கப்பட்ட செய்தியை விவரிக்கிறது. நிலங்கள் இந்த கோவிலுக்காக கொடையாக அளிக்கப்பட்டுள்ளது. அந்த நிலத்தின் மூலம் வரும் வருமானத்தை கோவிலின் தேவைகளுக்காக செலவு செய்வதுடன் அந்த நிலங்கள் கோவிலின் சொத்துக்களாகவும் கருதப்படுகிறது.

**கல்வெட்டு எண் 31**

திருக்கருகாவூர் திருக்கோவிலில் இறைவனுக்கு அமுதுக்காகவும், விளக்குகள் எரிவதற்காகவும் அளிக்கப்பட்ட நிலக்கொடை பற்றி கூறுகிறது.

அமுது என்பது தினசரி பூஜையில் இறைவனுக்கு சமர்ப்பிக்கப்படும் நைவேதியம் ஆகும். நிலக்கொடையில் வரும் வருமானத்தை வைத்து தினமும் இறைவனுக்கு நெய்வேதியம் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்தனர். இறைவனின் சன்னதி எப்பொழுதும் ஒளிர வேண்டும் என்ற பக்தியின் வெளிப்பாடும் தெரிகிறது. விளக்குஎரிய கொடை அளிப்பது பக்தி, பண்பாடு, நன்றி உணர்வு வெளிப்படுத்துகிறது.

**கல்வெட்டு ஆவணங்கள்**

1. இறைவனுக்காக 20 ஈழக்காசுகளுக்கு நிலம் விற்பனை செய்ததை குறிக்கிறது.
2. நெய்வேத்தியம் விளக்கு எரிய ஆடை குங்கிலியம் வழங்குவதற்காக மூன்று வேலி நிலம் கொடையாக கொடுக்கப்பட்ட செய்தியை குறிக்கிறது.
3. இண்டை மாலை, கை மணி, திருமாலை செய்வதற்காக ஒரு வேலி, 20 மா நிலம் கொடையாக கொடுக்கப்பட்ட செய்தியை குறிக்கிறது.

*4. திருவிளத்திற்காக நிலங்கள் கொடையாக கொடுக்கப்பட்ட செய்தியை குறிக்கிறது.*

*5. கோவிலுக்காக 31 காசுகள் பெற்றுக் கொண்டு நிலம் விற்பனை செய்ததை குறிக்கிறது.*

*6. சாத்தன் என்பவன் அளித்த நன்கொடை பற்றி குறிக்கிறது.*

*7. நாயனார் திருமேனி பூஜைக்காக 13 வேலி நிலம் அளிக்கப்பட்ட செய்தியை குறிக்கிறது.*

*8. அம்பாளுக்கு மஞ்சள் கலந்த திருமஞ்சனம் செய்வதற்காக இரண்டரை வேலி நிலம் அளித்ததை விவரிக்கிறது.*

*9. திருவிளக்கு நெய்வேத்தியத்திற்கு அளிக்கப்பட்ட நிலக்கொடையை விவரிக்கிறது.*

*10. நந்தா விளக்குஎரிய கொடை அளிக்கப்பட்ட செய்தியை விவரிக்கிறது.*

*11. திருக்கோவில் பூஜைக்காக 13 வேலி நிலம் அளித்ததை விவரிக்கிறது.*

*12. விளக்கு எரிவதற்காக ஒன்றரை வேலி நிலம் அளித்ததை விவரிக்கிறது.*

*13. கோவிலுக்கு அளிக்கும் நெய் பற்றிய செய்தியை விவரிக்கப்பெற்றது.*

*14. பிள்ளை நாயனாருக்கு மகாதேவர் மூலவர் ஆகியோருக்கு நெய்வேத்தியம் செய்யவும் இரண்டு விளக்கு எரியவும் நிலம் அளிக்கப்பட்ட செய்தியை விவரிக்கிறது.*

*15. கோவிலுக்கு விளக்கு எரிப்பதற்கு நிலம் அளிக்கப்பட்ட செய்தியை விவரிக்கிறது.*

*16. கோவிலுக்கு ஒன்பதரை வேலி நிலம் கொடை அளித்ததை விவரிக்கிறது.*

*17. சோழப் பேரரசரின் பணி மகளான விக்ரம பரணி கோவிலுக்காக நிலக்கொடை அளித்ததை விவரிக்கிறது.*

*18. உத்தமச் சோழர் மூன்று வேலி நிலம் அளித்ததை குறிக்கிறது.*

*19. மகா சபையினர் நிலக்கொடை அளித்ததை பற்றி கூறுகிறது.*

*20. மகாதேவருக்கு விளக்கு இடுவதற்காக அளித்த நிலக்கொடையை பற்றி கூறுகிறது.*

*21. கோவிலுக்காக அளிக்கப்பட்ட நன்கொடை பற்றிய செய்தியை குறிக்கிறது.*

*22. கோவிலுக்கு பிரம்பும், பீடமும் அளித்த செய்தியை விவரிக்கிறது.*

*23. கோவிலுக்கு நிலம் விற்றது பற்றியும் 17 களஞ்சி 11 மஞ்சாடி பொன் அளித்ததை பற்றி கூறுகிறது.*

*24. கோவிலுக்கு அணிகலன்களும் பூஜை பாத்திரமும் இசை கருவிகள் பற்றி விவரிக்கிறது.*

*25. இரண்டு வேலி நிலம் அளித்ததை குறிக்கிறது.*

*26. இறைவனுக்கு அளிக்கப்பட்ட நிலம் பற்றி குறிக்கிறது.*

*27. நந்தா விளக்கு எரிய அளிக்கப்பட்ட நிலக்கொடையை பற்றி குறிக்கிறது.*

*28. நந்தா விளக்கு எறிய முக்கால் வேலி நிலம் அளித்ததை பற்றி குறிக்கிறது*

*29. நிலக்கொடைகள் பற்றி குறிப்பிடுவதோடு ஈழக் காசுகள் பற்றியும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.*

*31.* இறைவனுக்குரிய அமுதுக்காகவும் விளக்குகள் எரிப்பதற்காகவும் நிலக்கொடை அளிக்கப்பட்ட செய்தியை குறிக்கிறது.

மேற்காணும் *31* கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினரால் *1992*ம் ஆண்டு படியெடுக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

கல்வெட்டுக்கள் என்பது வெறும் கற்றலிகளில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் அல்ல. அவை மக்களின் வாழ்க்கை, சிந்தனை, பக்தி, அறம், பண்பாடு ஆகியவற்றின் உயிர் உள்ள சாட்சியாகவும் கருதப்படுகிறது. கோவில்களுக்கு அளிக்கப்பட்ட கொடைகள் பற்றிய கல்வெட்டுகள் அந்த கால மக்களின் நன்றி உணர்வு, பொது நலன் நோக்கில் மனநிலை இறைபக்தி ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.

அந்த கொடைகள் பொருளாதார அர்த்தத்தை கொண்டு இருந்தாலும் அவற்றின் ஆழமான நோக்கம் அறத்தையும் பக்தியையும் நிலைநாட்டுவது என்பதே ஒருவரின் கொடை மூலம் மற்றொருவருக்கு நன்மை கிடைக்கும் என்ற எண்ணம் தமிழரின் "அறம் செய்ய விரும்பு" என்ற கொள்கையை வலியுறுத்துகிறது. கோவிலுக்கு விளக்கு எரிக்கவும்,நெய்வேத்தியம், திருவிழாக்கள் நடத்தவும் அளிக்கப்பட்ட நிலங்கள், நிதி, பொருள் ஆகியவற்றில் ஒரு தன்னலமற்ற பண்பாட்டினையும் அடையாளமும் பொதிந்துள்ளதுஎன நமக்கு உணர்த்துகிறது.

**பார்வை நூல்கள் :**


1. **திருக்கருக்காவூர் அருள்மிகு முல்லைவனநாதசுவாமி, திருக்கோயில் தலவரலாறு** தொகுத்து வழங்கியவர் மா.சிவகுருநாதபிள்ளை, 23வது பதிப்பு -2022
2. **திரிகடுகம்,** பொன்னுசாமிபிள்ளை, 3ம் பதிப்பு — 1917, ஸ்ரீவித்யா விநோதினி அச்சுக்கூடம், தஞ்சாவூர்
3. **திருக்குறள்,** புலியூர்க்கேசிகன் உரை, 11-ம் பதிப்பு — சூலை 2015, தென்றல் நிலையம், சிதம்பரம் — 608 001
4. **பழமொழி நானூறு,** மூன்றுறையறையனார் உரை, முதற்பதிப்பு — டிசம்பர் 2006 இளஞானம் பதிப்பகம், திருவண்ணாமலை — 606601
5. **பாபநாசம் வட்டக்கல்வெட்டு,** தொகுப்பாசிரியர் முனைவர் மார்க்சீய காந்தி, திருமிகு. இராமச்சந்திரன் , முதல் தொகுதி — 2004, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை — 600 113

*Referecnce Books :*


1. ***Thirukkarukavur Arulmigu Mullaivananathaswamy , Thirukkovil Thalavarlaru*** *presented by M.Sivagurunathan, 23rd Edition — 2022*
2. ***Thirikadugam*** *presented by Ponnusamypillai, 3rd Edition — 1917, Srividhya Vinothini Press, Thanjavur*
3. ***Thirukkural*** *by Puliyurkesikan, 11th Edition — July 2015, Thendral Nilayam, Chidambaram — 608 001*
4. ***Pazhamozhi Nanooru,*** *by Moondruraiyanar, 1st Edition — December 2006 Thirugnanam Publications, Thiruvannamalai — 606 601*
5. ***Papanasam Vattakkalvettu,*** *Editor Dr.Markseeya Gandhi, Mr.Ramachandran, 1st Edition — 2004, Archaelogy Department, Tamilnadu Government, Chennai*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com